அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் : 155 /2017

தேதி : 13.12.2017

**காவல் நிலைய ஆய்வாளர் பெரியபாண்டி அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

சென்னை மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர், பெரிய பாண்டி அவர்கள், ராஜஸ்தான் மாநிலம், பாலி மாவட்டத்தில் ராம்புரா என்ற இடத்தில், சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

தமிழகத்தில் நடைபெற்ற தங்கம் கொள்ளை தொடர்பாக, குற்றவாளிகளைப் பிடிக்கச் சென்ற போது இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

எப்படிப்பட்ட கொள்ளையையும் சிறப்பாகத் துப்பறிந்து, கொள்ளையர்களைக் கைது செய்வதில் மிகத் திறமையானவர் என்ற பெருமை, மறைந்த காவல் ஆய்வாளர் பெரியபாண்டி அவர்களுக்கு உண்டு.

இத்தகைய பெருமைமிகு பெரியபாண்டி அவர்கள், கடமையாற்றும் போது உயிரிழக்க நேரிட்டது ஒருபுறம் கவலை அளித்தாலும், அவரது வீரமரணம், அவரது உயிரைத் துச்சமாக மதித்து ஆற்றிய கடமை உணர்வு ஆகியவற்றுக்காக சமத்துவ மக்கள் கட்சி தலை வணங்குகிறது.

மறைந்த காவல்துறை ஆய்வாளர் பெரியபாண்டியின் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திறமையான அதிகாரியான பெரியபாண்டி அவர்களை இழந்திருக்கும் தமிழக காவல்துறைக்கும் என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

வெளி மாநிலங்களில், துப்பறியும் பணிகளுக்குச் செல்லும் காவல் அதிகாரிகளுக்கு அந்தந்த மாநில காவல்துறை தகுந்த பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்ய வேண்டும். பெரியபாண்டி அவர்களோடு கொள்ளையர் தாக்குதலில் காயமடைந்த மற்றுமொரு அதிகாரி மின்னல் முனிராஜ் அவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

காவல் நிலைய ஆய்வாளர் பெரியபாண்டி மரணத்திற்கான நீதியை தகுந்த முறையில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசையும், தமிழக காவல் துறையையும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com